DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, DINDIGUL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 248 / 2019 |
| Deposition of | : | PW : 7 witness for Prosecution<br>DW : |
| Name | : | ஜோசப் கிறிஸ்டோபர் பாபு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 on the 23rd day of August 2022.

முதல் விசாரணை:

1) நான் தற்போது திண்டுக்கல் ஜே.சி.பி. தனியார் மருத்துவமனையில் தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 25.08.2019 அன்று காலை 9.42 மணியளவில் 52 வயதுடைய திரு.தனசேகரன் என்பவர் பித்தளைபட்டி பிரிவு அருகே அதே நாளில் காலை 9.25 மணியளவில் வாகனவிபத்தினால் பாதிக்கப்பட்டு, ஜே.சி.பி.மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். வரும்போது அவர் சுயநினைவு இல்லை. அவருக்கு கீழ்கண்ட வெளிகாயங்கள் காணப்பட்டன.

3) 1) வலதுமேல் கையில் வீக்கம் காணப்பட்டது. 2) தலையின் வலதுபுறத்தில் கீழ்பகுதியில் 3x2x3 செ.மீ.அளவில் ஒருசிதைந்த காயம் காணப்பட்டது. 3) தலையின் வலதுபக்க முன்பகுதியில் 3x3 செ.மீ.அளவில் ரத்தகட்டு காணப்பட்டது. 4) தலையின் வலதுபக்க முன்பகுதியில் 3x3 செ.மீ.அளவில் சிராய்ப்பு காயம், 5) வலதுமேல் கையில் 4x7 செ.மீ.அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 6) வலது பாதத்தில் 1x1 சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 7) வலதுபக்க நெஞ்சுபகுதியில் வீக்கத்தோடு எலும்புகள் முன்பின் ஆடிக்கொண்டிருந்தன. 8) இடதுபக்க நெஞ்சுபகுதியில் வீக்கத்தோடு எலும்புகள் முன்பின் ஂஆடிக்கொண்டிருந்தன. 9) வயிற்றுபகுதியில் வீக்கம் 10) இரண்டு பற்கள் காணவில்லை. அவருக்கு நுண்கதிர் படம் ஸ்கேன் படம் எடுத்து பார்க்கப்பட்டது அவருக்கு வலதுபக்கம்

V PRIYA Digitally signed by V PRIYA Date: 2022.08.26 10:07:31 +0530

1 முதல 7 வரையிலான விலா எலும்புகள் உடைந்தும், ஸ்கெர்ணம் என்ற எலும்பு உடைந்தும், வலதுபக்க நெஞ்சுபகுதியில் ரத்தமும் காற்றும் கோத்துருந்தது. மூளையில் இடதுபக்கத்தில் ஒருரத்தக்கட்டு காணப்பட்டது. அவர் உள்நோயளியாக அனுமதித்து வெண்டிலேட்டர் உதவியுடன் ஐ.சி.யுவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் 04.09.2019 அன்று மாலை 6.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கியுள்ளேன்.

அதே நாளில் அதே நேரத்தில் 22 வயதுடைய தனசேகரின் மகள் நித்தியதங்கா என்பவர் அதே வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு, மருத்தவமனைக்கு சிகிச்சைக்கு வந்தபோது, கீழ்கண்ட வெளிகாயங்கள் காணப்பட்டன.

1) வலதுபக்க தலையின் முனபகுதியில் 3x2 செ.மீ.அளவில் ஒரு ரத்தக்கட்டு காணப்பட்டது. 2) இடதுபக்க இரண்டாவது கை விரலில் பின்பகுதியில் 05x05 செ.மீ.அளவில் சிராய்ப்பு காயம் 3) வலதுகாலில் முன்புறத்தில் 2x2 செ.மீ.அளவில் ரத்தக்கட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, வெளிநோயாளியாக டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளேன்.

அதே நாளில் 47 வயதுடைய திரு.தனசேகரின் மனைவி மாரிச்செல்வி அதே வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்தபோது, கீழ்கண்ட வெளி காயங்கள் காணப்பட்டது.

1) வலது கட்டைவிரலில் வீக்கம் இருந்தது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்க்கப்பட்டபோது எலும்பு முறிவு ஒன்றும் காணப்பட்டவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளேன்.

அதே தினத்தில் 10 வயதுடைய தனசேகரின் மகன் ஆதித்யா அதே வாகன விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்தபோது கீழ்கண்ட வெளிகாயம் காணப்பட்டது.

1) வலதுபக்க முகத்தில் 05 செ.மீ. அளவில் சில சிராய்ப்பு காயங்கள் சிராய்ப்பு காணப்பட்டது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன்.

மேற்படி காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடுகள் அ.த.சா.ஆ.3 முதல் அ.த.சா.ஆ.6 ஆகும்.

V PRIYA

Digitally signed by V PRIYA
Date: 2022.08.26 10:07:41 +0530

<u>குறுக்கு விசாரணை:</u>

1) தனசேகரன் மனைவி மாரிச்செல்வி எப்போது டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர் வெளிநோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு உடனடியாக அனுப்பப்பட்டார்.

2) விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் குறிப்பிடவில்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2022.08.26 10:07:48 +0530

Judicial Magistrate No.I
Dindigul.